# சைவமும், சிவமும்

- சைவம் என்பது - சிவ சம்பந்தமுடையது.
- கடவுள் என்பதன் பொருள் - யாவர் உணர்வையும் செயலையும் கடந்தவர்.
- இறைவன் என்பதன் பொருள் - எப்பொருளிலும் தங்குபவன்.
- முதல்வன் என்பதன் பொருள் - எப்பொருளுக்கும் முற்பட்டு அதனை தொழிற்படுத்துபவன்.
- சிவம் என்பது - செம்பொருள் என்ற சொல்லைக் குறிக்கும்.
- "பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க" - திருவாசகம்.
- திருஞானசம்பந்தர் பௌத்தர்களை வாதத்தில் வென்ற இடம் - திருத்தெளிச்சேரி
- "பாசமாம் பற்றறுக்கும் ஆரியனே" - திருவாதவூராரின் திருவாசகம்
- "தெய்வமே சிவமே, சிவனருள் சைவம் சிவத்தோடு சம்பந்தம்" - திருச்சிற்றம்பலநாடிகள் வாய்மொழி
- ஓரல் நீழல் ஒன்கழல் இரண்டும் - திருஞானசம்பந்தர் எழுதிய திருமொழிப்பாடல்.
- சிந்து சமவெளி நாகரிகம் இன்றிலிருந்து - சுமார் ஐந்தாயிரம் (5000) ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- ஹரப்பா என்னுமிடத்தில் முதன்முதலில் ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டவர் - சர் ஜான்மார்ஷல்.
- இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர் - காஞ்சிப்புராணம்.
- சமட்டி நிலை என்பது - பிரிவு நிலையைக் குறிக்கும். முழுமுதல் இணைத்தல் குறிக்கும்.

- வியட்டி நிலை என்பது - பிரிவு நிலையைக் குறிக்கும்.
- சத் என்ற சொல் குறிப்பது - சிவபெருமான்
- சத்தாகிய ஒன்றே முதற்கண் உலகத் தோற்றத்தின் முன் அத்விதீயமாய் இருந்தது - சாந்தோக்ண உபநிஷத்.
- ஒருவன் உருத்திரனே, இரண்டாவதொன்றைக் கொள்வார் அல்லர் - சுவாதாசுவர உபநிஷத்.
- ஒருவன் என்னும் ஒருவன் காண்க - மாணிக்கவாசகர்
- ஒளி மணிவண்ணன் என்கோ நளிர்மதிச் சடையன் என்கோ -- நம்மாழ்வாரின் திருவாய்மொழி.
- சக்தியும் சிவனும் சத் எனும் சொல்லின் பகுதி விகுதிகளாக ஓதப்படுகிறார்கள்
- தம்மலர் அடியொன்று அடியவர் பரவ - திருஞானசம்பந்தர்.
- சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை தோன்றிய காலம் - சங்க காலத்தின் இறுதியில்.
- சுடலையாடி என அழைக்கப்படுபவர் - சிவபெருமான்
- உலகம் யாவும் யாண்டு ஒடுங்கம், அவை ஆண்டு நின்றே தோன்றும் - கலித்தொகை
- ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர் - சிவஞானபோத முதற் சூத்திரம்.
- மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து தொல்காப்பியரின் காஞ்சித்திணையின் பொருட்பகுதி.
- ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி - சிவஞான போத ஒன்பதாம் சூத்திரம்.
- தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல்கள் - நான்கு வேத நெறியினையும் நான்மறை வழக்கையும் தழுவி அமைந்துள்ள நூல்களாகும்.

- தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்கக்கும் இறைவா போற்றி - மாணிக்கவாசகர்.
- கங்கையும் யமுனையும் இணையுமிடம் - பிரயாகை
- தேவர் குறளும் திருநாள் மறைமுடியும் - ஔவையாரின் நல்வழி
- நான்கு வேதங்களின் முடிவு என அழைக்கப்படுவது - உபநிடதங்கள்.
- சைவ சமயத்தின் பழங்கால பெயர்கள் - திருநெறி, மெய்நெறி, முன்நெறி, சிவமாநெறி.
- ஆரியர்கள் சிந்து நதிக்கரையில் வசித்தபோது அவர்களை இந்துக்கள் என அழைத்தவர்கள் - பாரசீகர்கள் மற்றும் கிரேக்கர்கள்.
- ஹிந்து என்பதன் பொருள் - ஹிம்சையில் துக்கிக்கின்றவன்
- பிற உயிர் துன்புறும்போது அத்துன்பம் தமக்கு நேர்ந்தது போல் வருந்துபவன் - இந்து
- அன்பே சிவம் எனக் கூறுவது - இந்து மதம்
- இந்து மதத்தின் வேறுபெயர்கள் - சநாதனதர்மம், திருநெறி, தவநெறி, அருள்நெறி, அன்புமதம் ஆகியன.
- சநாதனதர்மம் என்பதன் பொருள் - அழிவில்லா அறம்.
- உலக மதங்களுக்கு பழமையான மதம் - இந்து மதம்
- இந்து மத இணைப்பு விளக்கம் எனும் நூலை எழுதியவர் - மகாவித்துவான் ஆறுமுக நாவலர்.

## வேதங்கள் மற்றும் உபநிஷத்துகள்:

- வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், புராணம், இதிகாசம் ஆகியன.
- வேதம் என்பது - அறிவுநூல், மறை, சுருதி எனப்படும்.
- வேதம், ரிக், யசூர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும்.
- அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ள வரிவிதிப்பு கோல் - 1/6 வரி வசூலிக்கப்பட்டது.
- உபநிஷத்துகள் ஏற்காதது - சடங்குகள் மற்றும் வேள்விகள்.
- வேதத்தின் மறுபெயர் - ஸ்ருதி, எழுதாக்கிளவி
- வேதத்தின் முக்கிய இலட்சியம் - தன்னைத்தானே அறிந்து கொள்ளல்.
- வேதங்கள் வலியுறுத்தும் கடமைகளின் எண்ணிகை - ஐந்து.
- வேத நன்னடத்தை விதிகள் - ஸ்மிருதிகள் எனப்பட்டன.
- வேதம் ஏற்றுக்கொள்ளும் அறக்கோட்பாட்டு தத்துவம் - ரிதா (இது தர்மநிலைக் கோட்பாட்டின் முன்வடிவம்)
- வேதத்தை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு நடக்கும் தர்சனங்களின் பெயர் - ஆத்தீகம் (அ) வைதீகம்.

## ரிக் வேதம்:

- ரிக் என்பதற்கு - துதித்தல் (அ) வழிபடல் எனப்பொருள்.
- வேதங்களில் பழமையானது - ரிக் (10 மண்டலங்கள், 1028 பாடல்கள்)
- முதல் 7 மண்டலங்களில் இறைவனை அக்னியாக குறிப்பிடுவது - ரிக்வேதம்.

- 10வது மண்டலத்தில் இறைவனை பிரம்மன், இந்திரன் என்ற பெயரில் குறிப்பிடுவது - ரிக்வேதம்
- 10வது மண்டலத்தில் உள்ளது - புருஷசூக்தம் என்ற பாடல் (வர்ணங்களை விளக்குகிறது)
- ரிக் வேதகால கடவுள்கள் - அக்னி, வருணன், இந்திரன்
- ரிக் வேதம் -கி.மு. 1200 -க்கு முற்பட்டது.
- இறைவனை துதிப்பாடல் மூலம் வணங்க இவ்வேதம் வழிசெய்கிறது.

## யசூர் வேதம்:

- யாஜ் என்ற சொல்லின் பொருள் - யாகம் என்பதாகும்.
- யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளை செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி குறிப்பிடுவது - யசூர் வேதம்.
- அமாவாசை, பௌர்ணமிக்கு செய்ய வேண்டிய வேள்விகள், பிதுர்கர்மம் பற்றி கூறுவது - யசூர் வேதம்.
- யசூர் வேதத்திலுள்ள சிறப்புவாய்ந்த பகுதி - ருத்ரம்
- யசூர் வேதம் -வேள்வி, சடங்குகள் பற்றியது (சுக்ல யசூர் வேதம், கிருஷ்ய யசூர் வேதம் என இரு பிரிவுகளை உடையது)
- யசூர் வேதத்தில் உள்ள அத்தியாயங்கள் - 18.

## சாம வேதம்:

- வக்கதர் என்ற குறிப்பிட்ட புரோகிதர்களால் பாடப்பட்ட பாடல் தொகுப்பு - சாம வேதம் (1459 பாடல்கள் உள்ளன)
- இறைவனை இசையுடன் பாடி துதிப்பது - சாமவேதம்
- பாபம் நீக்கி பலன் கொடுக்கும் பாடல்கள் அடங்கியது -சாமவேதம்

## அதர்வண வேதம்:

- மந்திர உச்சரிப்பு முறை, விரோதி அழிவின் பொருட்டு செய்யப்படும் பில்லி, சூனியம் முறை, வேதசாரக்கிரியை, அனுஷ்டானங்களை பற்றிய தோத்திரங்கள் அடங்கியுள்ளது.
- பிரம்ம வேதம் எனப்படுவது - அதர்வண வேதம் (731 பாடல்கள், 20 பகுதிகள்)
- மந்திரம், பில்லி, சூனியம் பற்றியது அதர்வண வேதம்.

------***------***------